OS.01/2021
Dated. 15.11.2024
Name : திரு.முருகேசன் (PW2)
Time: 04.20 PM

<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. வாதி இராமலெட்சுமி அவர்களின் கணவர் அழகர்சாமியுடன் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

2. நான் நீண்ட நாட்களாக அபிராமத்தில் வசித்து வரும் நபரா என்றால் நான் அபிராமத்தில் தங்கி ரேஷன் கடைகளில் வேலை செய்து வந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போதும் அபிராமத்தில் தான் வசித்து வருகிறேன்.

3. நான் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்று நான் தாக்கல் செய்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்து வெள்ளையத்தேவருக்கு பூர்வீகப் பாத்தியம் ஆகும். வாதி இராமலெட்சுமியை எனது தம்பி 30 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார்.

5. வெள்ளையத்தேவர் தாவாச் சொத்தை அனுபவம் செய்து வந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும்.

6. 30 வருடங்களுக்கு முன்பு முத்துராமு, பால்ச்சாமி, காந்தி ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று சொல்லக் கேட்டு தெரிந்து கொண்டேன்.

7. பால்ச்சாமி என்பவருக்கு வாதியின் தாயார் முதல் மனைவி என்ற விபரம் தெரியும். அவரது 2ம் மனைவி 1ம் பிரதிவாதியான பாக்கியம் என்றால் சரிதான்.

8. வாதிக்கு பாகம் கோரி கேட்க சென்றபோது 4ம் பிரதிவாதியிடம் பேசினோம். வாதியின் பங்கை கேட்டோம். பங்கு கேட்டுச் செல்வதற்கு முன்பு வாதி எந்த சொத்திலும் விவசாயம் செய்யவில்லை.

9. 10 இலக்கச் சொத்துக்களுக்கும் மேலான சொத்துக்களுக்கு வாதி பாகம்

கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது என்று எனக்கு தெரியும்.

10. தாவா 1ம் இலக்கச் சொத்து எந்த இடத்தில் அமைந்துள்ளது என்று என்னால் குறிப்பிட்டுக் கூற இயலவில்லை. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது. பூர்வீக வீட்டை பொருத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.